12.03.2025.

கூடுதல் அமர்வு நீதிமன்றம் (விரைவு நீதிமன்றம் விழுப்புரம் )

அமர்வு வழக்கு எண்.107/2018

அ.சா.17

| | | | |
|---|---|---|---|
| பெயர் | ஓம் பிரகாஷ் | | |
| த/பெ | கலுவு | | |
| கிராமம் | தோகைப்பாடி | தொழில் | |
| தாலுக்கா | விழுப்புரம் | வயது | 37 /2025 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | |

இன்று உதவியாளர் அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

முதல் விசாரணை

நான் தற்போது மேற்படி விலாசத்தில் வசித்து வருகிறேன். நான் தற்போது ஓட்டுனராக பணி செய்து வருகிறேன். என்னிடம் காண்பிக்கப்படும் 3ம் எதிரி ரகு என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடைது தான். அது அ.சா.ஆ.9 ஆகும். கைப்பற்றுதல் மகசரில் உள்ள 2ம் கையெழுத்து என்னுடைது தான். அது. அ.சா.ஆ.10 ஆகும். சுமார் 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நண்பரை பார்ப்பதற்கு நான் தாலுக்கா காவல் நிலையம் சென்றேன். அப்போது காவல் துறையினர் என்னை ஒரு வெற்று தாளில் கையெழுத்து போட சொன்னார்கள். நான் எதற்கு என்றுகேட்டேன் அதற்கு அவர்கள் விசாரணைக்காக தேவைப்படுகிறது என்று கையெழுத்து வாங்கினார்கள். என் முன்பு எந்த நபரையும் விசாரணை செய்யவில்லை. என் முன்னிலையில் ஆய்வாளர் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை. என்னுடன் யார் கையெழுத்து செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. என்னிடம் தனியாக தான் கையெழுத்து வாங்கினார்கள். எனக்கு வழக்கு

சம்மந்தமாக எதுவும் தெரியாது. காவல் துறையினரும் எதுவும் என்னிடம் சொல்லவில்லை.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதிகோரி அனுமதி வழங்கப்பட்டது.

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

கடந்த 15/09/2014 ந் தேதி இவ்வழக்கில் 3 ம் எதிரி ரகுவை நீதிமன்ற பாதுகாவலில் இருந்து எடுத்து காவல் நிலையத்தில் வைத்து 3 ம் எதிரியை விசாரிக்க 3 ம் எதிரி தாமாக முன்வந்து யாருடைய தூண்டுதல் இல்லாமலும், ஆசை வார்த்தை இல்லாமலும், என் முன்னிலையிலும், லட்சுமணன் என்பவர் முன்னிலையிலும் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 1ம் எதிரிக்கும், கண்டம்பாக்கத்தை சேர்ந்த வழக்கறிஞர் ஆறுமுகம் என்பவருக்கும் முன்விரோதம் இருந்தது குறித்து முதலில் ஆறுமுகம் என்பவரை கொலை செய்ததாகவும், அந்த கொலை வழக்கில் கண்ணுற்ற சாட்சியாக இருந்த ஆறுமுகத்தின் அண்ணன் முருகன் என்பவர் இருந்து வந்ததாகவும், முருகன் என்பவரிடம் பல முறை சமாதானம் பேசியும் பயன்ஏற்படாத நிலையிலும், கடந்த 29/08/2014 ந் தேதி அதிகாலை 3. 30 மணியளவில் முருகன் தன் வீட்டின் திண்ணையில் படுத்து இருந்தவரை 1ம் எதிரியுடன் சேர்ந்து தானும், கொலை செய்ததாக ஒப்புக்கொண்டு வாக்குமூலம் கொடுத்தார் என்றும், அவர் கொலைக்கு பயன்படுத்திய கத்தியை தன்னை அழைத்து சென்றால் கண்டம்பாக்கத்தில் உள்ள மேம்பாலத்தின் கீழ் மறைத்து வைத்திருந்ததை எடுத்து ஆஜர் செய்வேன் என்று சொன்னதன் பேரில் நானும், லட்சுமணனும் எங்களுடன் விழுப்புரம் தாலுக்கா

காவல் ஆய்வாளரும் மற்றும் போலீசார் சகிதம் சம்பவ இடம் சென்று 3ம்எதிரி மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து ஆஜர் செய்தார் என்றும், காவல் ஆய்வாளர் கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி அந்த மகசரில் நானும், லட்சுமணனும் சாட்சியாக கையொப்பம் போட்டோம் என்றும், போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

**இல்லை.**

**மறுவிசாரணை**

**இல்லை**